**பட்டங்கல பல்கலைக்கழகக் கல்லூரிம் - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

பட்டங்கல பல்கலைக்கழகக் கல்லூரியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, தேறிய சொத்துக்களிலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புகள் மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிராகரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கல்லூரியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும், அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்புகள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கல்வி நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கல்வி நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கல்லூரியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கல்வி நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கல்வி நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வது எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோளாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ் கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மெற்கொள்ளப்படும் பொருளதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்கு செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காயிவின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீட்டு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றை கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கல்வி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்வி நிறுவனத்திற்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருன்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது

அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாக காணப்டுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கல்வி நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பது மதிப்பீடு செய்யப்பட்டது.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கல்லூரியின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள், மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக செய்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கல்லூரியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்க பூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீரமானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 134(3) பிரமாணம் | கைத்தொழில் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கணக்காய்வாளரால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டுக்காக | 2022 ஆம் ஆண்டுக்காக உள்ளகக் கணக்காய்வு அறிக்கையொன்று உள்ளகக் கணக்காய்வினால் எமக்கு | உள்ளகக் கணக்காய்வு மேற்கொண்டு அறிக்கையின் பிரதியொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும். |

| | |
|---|---|
| உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டு கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அனுப்பப்படவில்லை என்பது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 19,597,628 ஆன பற்றாக்குறையாக காணப்பட்டதுடன், அதனோடு ஒத்ததாக கடந்த வருடத்தின் பற்றாக்குறையானது ரூபா 9,228,410 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம், நிதிப் பெறுபேறுகளில் ரூபா 10,369,218 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு செயற்பாட்டு செலவினம் ரூபா 8,004,537 இனால் அதிகரித்தமை, மீண்டெழும் வருமானம் ரூபா 764,816 இனால் குறைவடைந்தமை ஆகியள பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பனாவல பட்டங்கல விவசாய திணைக்களத்திற்குரிய 05 ஏக்கர்கள் பரப்பளவான காணியில் படங்கல பல்கலைக்கழக கல்லூரி 2016 ஒக்தோபர் 18 ஆந் திகதி நிறுவப்பட்டுள்ள போதிலும், கணக்காய்வுத் திகதியான 2022 சனவரி 28 ஆந் திகதி வரையிலும் பல்கலைக்கழக கல்லூரிக்கு அந்த காணியை சுவீகரிக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2016 ஆம் ஆண்டு முதல் சுவீகரிப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இதுவரையிலும் சுவீகரிப்பதற்கு தேவையான அளவீட்டு நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளது என்பது. | பல்கலைக்கழக கல்லூரிக்கு காணிகளை சுவீகரிக்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட பரீட்சை பெறுபேறுகள் தொடர்பிலான தெரிவுப் பரிசோதனையின் போது 2018 குழு NVQ 5/6 S – II மற்றும் 2019 இல் முதலாவதாக பரீட்சைக்கு | 2018 மாணவர் குழுவிற்குரிய NVQ 5/6 இன் முதலாவது கல்வியாண்டின் இறுதித் தவணை பரீட்சைகள் உரிய முறையில் திட்டமிடப்பட்டுள்ள போது மாணவர் குழுவினால் பரீட்சை புறக்கணிக்கப்பட்ட காரணத்தால் அந்த குழுவிற்கு | பரீட்சைகளில் தோல்வியடைதல் மற்றும் பரீட்சைக்கு சமூகமளிக்காமை தொடர்பில் ஆராய்ந்து அதற்கு உரிய தீர்வினை வழங்குவதற்கு முகாமைத்துவத்தின் |

| | | |
|---|---|---|
| தோற்றி சித்தியடையும் சதவீதம் 50 சதவீதத்தினை விட குறைவான 18 மற்றும் 10 ஆக காணப்பட்டதுடன், பரீட்சையில் தோற்றாத சந்தர்ப்பங்கள் 16 மற்றும் மீள விண்ணப்பித்து பரீட்சைக்கு தோற்றி சித்தியடையும் சதவீதம் 50 சதவீதத்தினை விட குறைவான 19 சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. இதற்கமைய பரீட்சையில் தோல்வியடைதல், பரீட்சைகளுக்கு தோற்றாமை மற்றும் பரீட்சையை உரிய முறையில் பூர்த்தி செய்யாமை தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | அதற்கடுத்த தவணையில் பரீட்சைக்கு தோற்றுவதற்கு நேர்ந்தமையால் இந்நிலைமை உருவாகியிருந்தது. | கவனம் செலுத்தப்பட வேண்டும். |

## 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) பல்கலைக்கழக கல்லூரிக்காக மாணவர்கள் விண்ணப்பித்தல், மாணவர்களை ஆட்சேர்ப்பு செய்தல், பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறுதல் மற்றும் தொடர்புடைய பாடநெறிகளை நிறைவு செய்தல் தொடர்பான பரிசோதனையில் மாணவர்கள் பல்கலைக்கழக கல்லூரியில் பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களின் முன்னேற்றம் 2020 ஆம் ஆண்டை விட 2021 ஆம் ஆண்டு 15 சதவீதத்தால் | நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று நிலைமை காரணமாக, மாணவர்கள் விண்ணப்பிக்கும் சதவீதம் குறைந்துள்ளதுடன், குறிப்பாக நிகழ்வு முகாமைத்துவம் மற்றும் சுற்றுலா மற்றும் சுற்றுலா முகாமைத்துவம் ஆகிய படிாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கும் முன்னேற்றம் சுற்றுலாத் துறையில் ஏற்பட்ட சரிவின் காரணத்தால் ஏற்பட்டதாகும். | கல்லூரியின் பாடப்பிரிவுகள் தொடர்பான விரிவான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மூலம் அதிகபட்ச மாணவர்களைச் சேர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறைந்துள்ளது. நிகழ்வு முகாமைத்துவம், பண்ணை இயந்திர தொழில்நுட்பம், சுற்றுலா மற்றும் பயண முகாமைத்துவம் மற்றும் பாடநெறிகளுக்கு மாணவர்கள் விண்ணப்பிப்பதிலான செயன்முன்னேற்றம் முன்னேற்றம் 2020 ஆம் ஆண்டை விட 2021 ஆம் ஆண்டில் முறையே 27 சதவீதம், 32 சதவீதம் மற்றும் 43 சதவீதம் குறைந்துள்ளது. அந்தப் பாடநெறிகளை நிறைவு செய்வதில் 2017 மற்றும் 2018 குழுக்களின் முன்னேற்றம் 65 சதவீதம் மற்றும் 54 சதவீதம் என்ற அளவில் இருந்தது. அதன்படி, இந்நிறுவனத்தின் முதன்மை நோக்கமாக இருந்த நாட்டிற்கான டிப்ளோமாதாரர்களை உருவாக்கும் சதவீதம் குறைந்துள்ளது. | | |
| (ஆ) | பாடநெறிகளுக்குரிய சில விடயங்கள் (Module) தொடர்பில் தெரிவு செய்யப்பட்ட 57 விடயங்களின் மாதிரிக்குரியதாக நிறைவு செய்வதற்கு திட்டமிட்ட விரிவுரை மணித்தியாலங்களுக்கு ஒப்பாக நிறைவு செய்த மணித்தியாலங்களின் அளவினை ஒப்பிடும் போது 4 சதவீதம் முதல் 50 சதவீதம் வரையான மட்டத்தில் காணப்பட்ட 39 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. இதன் காரணமாக மாணவர்களுக்கு | இணையவழி கற்பித்தல் முறையின் ஊடாக பௌதீ கரீதியாக மேற்கொள்ளப்படும் 1½ மணிநேரம் ஒரு மணிநேரத்திற்குச் சமம் ஆகும்.அவ்வாறு கருத்திற்கொள்ளும் போது இணையவழி முறையின் மூலம் செய்யப்படும் மணிநேரத்தின் அளவு இங்கே கொடுக்கப்பட்டுள்ள தொகையிலிருந்து வேறுபட்டு காணப்பட்டது. | மாணவர்கள் அதிக பங்களிப்பை வழங்கும் வகையில் விரிவுரை நேரம் திட்டமிடப்பட வேண்டும். |

கிடைக்கும் விடய அறிவின் பொருண்மைத்தன்மை மற்றும் விடயப்பரப்புகளின் தரம் தொடர்பில் கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதிருந்தது.

## 3.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| கல்லூரியின் விருந்தோம்பல் முகாமைத்துவ பிரிவின் மாணவர்களின் பயிற்றுவிப்பு நடவடிக்கைகளுக்காக அத்தியாவசியமான பிரிவொன்றான குளியலறையொன்றினை பல்கலைக்கழக வளாகத்தினுள் நிறுவுவதற்காக திறன்கள் துறைசார் அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் ரூபா 464,400 பெறுமதியான குளியலறை உபகரணங்கள் 2015 ஆகஸ்ட் 24 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. எனினும், கணக்காய்வுத் திகதியளவில் 2023 பெப்ரவரி 08 ஆந் திகதி வரையிலும் சுமார 08 வருட காலம் கடந்திருந்த போதிலும், குளியலறையொன்றினை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்காமையால் அந்த உபகரணங்கள் அறையொன்றில் விளைவற்றுக் காணப்பட்டன. அவ்வாறே, மாணவர்களுக்கு இதனுடன் தொடர்படைய பயிற்சி நடவடிக்கைகளுக்காக வேறு இடங்களுக்கு அனுப்ப வேண்டியதாக காணப்பட்டது. | விருந்தோம்பல் முகாமைத்துவம் கல்லூரியில் குளியலறையொன்றினை நிர்மாணிப்பதற்கு தற்போது பெறுகை நடவடிக்கைகள் இடம்பெற்றவாறு உள்ளதுடன், இந்த வருடத்தினுள் நிர்மாணங்கள் நிறைவு செய்யப்படவுள்ளமை. | சொத்துக்கள் உச்ச செயற்திறனுடனும், ஆக்கபூர்வமாகவும் நோக்கத்திற்குரிய பணிகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும். |

## 3.4 செயற்திட்ட அல்லது மூலதன பணியிலான தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| மதிப்பிடப்பட்ட கூட்டுப்பெறுமதி ரூபா 5,398,645 உடைய விருந்தோம்பல் முகாமைத்துவம் மற்றும் ஆராய்ச்சிக்கூடத்தினை விரிவுபடுத்தல் மற்றும் பண்னை உபகரண தொழில்நுட்பம் மற்றும் வேலைத்தளங்களை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் 2021 யூலை 20 ஆந் திகதி கிடைத்திருந்த போதிலும் அந்த செயற்திட்டத்தினை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்காக 2021 ஆகஸ்ட் 03 ஆந் திகதி முதல் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், அந்த ஒவ்வொரு செயற்திட்டத்திற்காகவும் கூறுவிலையொன்று கிடைத்திருந்த போதிலும், அனைத்து கூறுவிலைகளும மதிப்பிடப்பட்ட பெறுமதியை விட 30 சதவீதம் விஞ்சியிருந்தமையால் இந்த நிர்மாணம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட அறிவுரை வழங்கப்பட்டது என்பது. | செயற்திட்டத்தை தாமதமின்றி ஆரம்பிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| விரிவுரையாளர்களை ஆட்சேர்க்கும் போது அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைய தகைமைகளை பூர்த்தி செய்திராத விரிவுரையாளர்கள் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | கோவிட் தொற்றுநோய் நிலைமையைக் கருத்தில் கொண்டு 2021 அக்டோபர் 27 அன்று நடைபெற்ற 110வது தொழிற்கல்வி தொழில்நுட்பப் பல்கலைக்கழக நிர்வாகக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் இது இடம்பெற்றுள்ளது. | ஆட்சேர்ப்பு நடைமுறையின் படி ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும். |